1978 செப்டம்பர் 11]

சேரன் போக்குவரத்தின் பணி விதிகள்.

* வினா எண் 143—திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேரன் போக்குவரத்துக் கழகத்தில் தொழிலாளர்களுக்கு நிரந்தர விதிகள் அமுலாக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவைகளை அரசு பரிசீலித்து ஒப்புதல் அளித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டப்பட்ட வீடுகளில் அனுமதியின்றி குடியேறி உள்ள மக்களிடத்திலிருந்து குடிக்கூலி 5-6-1978-க்கு முன்புவரை வசூலிக்கப்பட்டு வந்தது. அத் தேதிக்குப்பின் இக் குடிக்கூலி வசூலிக்கப்படுவதில்லை.

(ஆ) இது பற்றிய செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். வரதராஜன்: இந்தச் சேரன் போக்குவரத்துக் கழகத்தில் ஸ்டாண்டிங் ஆர்டர் இன்று இருந்தும் 4,500 மொத்தத் தொழிலாளர்களில் 2,500 பேர் வரையில் காஷுவல் தொழிலாளர்களாக வைத்திருக்கிறார்கள் என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அவ்வாறு இருந்தால் அதை மாற்ற அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; மாண்புமிகு உறுப்பினர் வினாவுக்கும் ஸ்டாண்டிங் ஆர்டருக்கும் தொடர்பு இல்லை என்று சொன்னாலும் கூட அதுபற்றிய தகவல் கொடுப்பார்களானால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. அ. செல்லப்பா : சேரன், சோழன் போன்ற போக்குவரத்துக் கழகங்களில் அப்பரன்டிசாக வேலை பார்ப்பவர்கள் இரண்டாண்டுகள் கழித்து வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள். அவர்கள் நலனைக் கருதி நிரந்தரமாக அவர்களை வேலையில் அமர்த்திக் கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அப்பரண்டிஸ் காலம் முடிவுற்ற பிறகு அவர்கள் எல்லோருக்கும் போக்குவரத்துக் கழகங்களில் வேலை கொடுப்பது என்பது இயலாத காரியம். அப்பரண்டிஸ் பணியை முடித்தவர்கள் 2,500 பேருக்கு மேல் இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அதன் அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

TRUTH ALONE TRIUMPHS

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகத்திலே மட்டுமல்லாது எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் சேர்ந்து ஒரு நிரந்தரமான அடிப்படையிலேதான் தொழிலாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் அவர்களுடைய பணி நிரந்தரமாக்கப்படும் என்பதற்கு ஆன உத்தரவுகளை இந்த அரசாங்கம் அறிவிக்குமா? அத்துடன், வேலூரிலே இருக்கிற தொழிலாளர்கள் டெம்பரரியாக இருக்கிறவர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் விடப்பட்டு அதே நேரத்திலே புதிய புதிய ஆட்களைச் சேர்த்து வருகிறார்கள், இது போன்ற முறைகேடுகளை நீக்குவதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, 240 நாட்கள் பணிக்காலம் முடிந்த பிறகு அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்பது நடைமுறையில் இருந்து வருகிறது. மற்ற சில போக்குவரத்துக் கழகங்களிலே 3 ஆண்டுக்காலம் ஆகியும் நிரந்தரமாக்கப்படவில்லை யென்ற குற்றச்சாட்டு வந்து அவர்களை யெல்லாம் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, லாபத்தில் ஓட்ட வேண்டும் என்ற பெயரால் சேரன் போக்குவரத்து கழகத்திலே நிரந்தரமாக உள்ள டிரைவர்கள் கண்டக்டர்களை யெல்லாம் திடீரென்று சாதாரணக் காரியங்களுக்காகக்கூட வெளியே போகச் சொல்லிவிட்டு அதற்குப் பதிலாக அவர்கள் பார்க்கிற வேலைகளை அப்பரன்டீஸ் ஆக இருக்கிறவர்களுக்குக் கொடுத்து குறைந்த சம்பளத்தில் அவர்களிடமிருந்து வேலை வாங்கிக் கொள்ளக்கூடிய நிலைமைகள் சட்டத்திற்கு முரண்பாடாக எல்லாம் இருக்கின்றன. அந்த நிலைமைகளை நிவர்த்திப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும். அந்த விதமான குறைபாடுகள் இருந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக விடப்படுகின்ற பேருந்துகள் அனைத்தும் மழைபெய்கிறபோது அதிலே பிரயாணம் செய்கிற பயணிகள் எல்லாம் மழைபெய்து ஒழுகுவதால் நனைந்து கொண்டு வரக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் அந்தப் பயணிகள் எல்லோருக்கும் குடையோ அல்லது மழைக் கோட்டோ வாங்கிக் கொடுப்பதைப்பற்றி ஆலோசிப்பார்களா?

1978 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகைப்படுத்திக் கூறுகின்ற போதிலும் அப்படிப்பட்ட குறைகள் எல்லாம் இல்லாத வகையிலே புதிய பேருந்துகளை விரைவுப் பேருந்துகளாக விடுவதற்கு பல வழித்தடங்களிலே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நிதிநிலைமைக்கு ஏற்ப மேலும் அவைகளை விடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, அதே மாதிரி தனியார் பஸ்களிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற கண்டக்டர்கள், டிரைவர்கள் எல்லாம் இருக்கிறார்கள், அந்த ரூட்டை அரசாங்கம் ஏற்றுக்கொண்ட பிறகு அந்த பஸ்களிலே சென்ற டிரைவர்கள், கண்டக்டர்கள் பலரும் இன்றைக்கு வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு அரசு பஸ்களிலே வேலைவாய்ப்புக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையிலே உள்ள பஸ்களை அரசு நாட்டுடமையாக்கும்போது சியாப்டர் 4-ஏ விதிகளின் அடிப்படையிலே அந்தப் பணியாளர்களை அரசுப் பணியிலே அமர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சியாப்டர் 4 அடிப்படையில் தனியார் பஸ்காரர்கள் பஸ்களை விடுகிறபோது தொழிலாளர்களின் தகவல்களை அரசுக்குத் தராத காரணத்தால்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன, அதையும் அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு. த. இராமசாமி : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து இராமேஸ்வரம் வரைக்கும் செல்லுகின்ற பல்லவன் போக்குவரத்துக் கழக வண்டிகள் 3 வண்டிகளும் பழுது அடைந்த நிலையிலே நல்ல கண்டிஷனில் இல்லாத வண்டிகளாக விடப்படுகின்றன. இதன் காரணமாக காட்டுப் பகுதிகளிலே இடையிலே வண்டிகள் நின்றுவிடுகின்றன, 10, 12 மணிநேரம் கழித்து ஊர் போய் தாமதமாகச் சேரக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அந்த வழித்தடத்தில் புதிய வண்டிகளை விடுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதில் கூறியிருக்கிறேன், அதுபற்றிக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. கந்தசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் கேட்க நினைத்ததை மாண்புமிகு உறுப்பினர் சொன்னாலும், நானும் வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சமீபத்திலே

[1978 செப்டம்பர் 11

பி. டி. சி. பஸ்ஸிலே நானும் எனது கட்சித் தலைவரும் வந்தோம். மதுரையிலிருந்து பல்லாவரம் வரையிலே மழை இருந்தது. நனைந்துகொண்டே தான் வந்தோம், பல்லாவரத்திலே மழையில்லை, ஆனால் பல்லாவரத்திலே பஸ் ஓடாமல் நின்றுவிட்டது, அதற்குப் பிறகு வேறு பஸ்ஸிலே தான் வந்தோம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அதைப்பற்றி வாக்குறுதி தந்த பிறகு நேரத்தை தாங்கள் வீணாக்க வேண்டாம்.

திரு. கே. கந்தசாமி: நேரத்தின் புனிதத் தன்மையை உணர்ந்துதான் சொல்கிறேன், ஆனால் வேதனையோடு சொல்கிறேன், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே பணியை ஆற்ற முடியாத நிலைமையிலே அன்றைக்கு பூராவும் தலைவலி இருந்தது, மறுநாளும் தலைவலி இருந்தது. சட்டமன்ற நடவடிக்கைகளில் நாங்கள் சுறுசுறுப்பாக ஈடுபடுவதற்கு நம்முடைய பஸ்களின் சௌகரியக் குறைவு இடையூறாக இருப்பதால் சபாநாயகர் அவர்களும் எங்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும், அவை முன்னவரவர்களும் இப்படிப்பட்ட இடையூறு வரும்பொழுது......

[முற்பகல் 9-50]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய அபிப்பிராயத்தை எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து விட்டீர்கள். நடந்த நிகழ்ச்சியை இழுத்துக் கொண்டே போனால் என்ன அர்த்தம்?

திரு. கே. கந்தசாமி: இனிமேல் அப்படி ஏற்படாமல் இருக்கப் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எல்லோருக்கும் தெரிந்தாகிவிட்டது, அமைச்சருக்கும் தெரிந்தாகிவிட்டது, நடவடிக்கை எடுப்பார்கள், நீங்கள் உட்காருங்கள்.

TRUTH ALONE TRIUMPHS

சிதம்பரம் வட்டத்தில் சாலைப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு.

*வினா எண் 144— திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம் சி. முட்லூர் முதல் கிள்ளை வரை உள்ள நெடுஞ்சாலையில் வீடு கட்டியுள்ள விவசாய மக்கள் அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு மாற்று மனை கொடுக்கப்பட்டுள்ளதா?